டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இத்தனை மணிக்கு மேல் விளக்குகள் எரியக் கூடாது என்று இருந்தும் இரவெல்லாம் விளக்குப் போட்டுக்கொண்டு திறந்து வைத்துக் கொண்டு அங்கே சூதாட்டம் நடைபெறுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும். எப்போதும் கட்சி தான் ஆட்சிக்கு வரும். அவர்கள் எந்தக் கட்சியைப்பற்றிக் கூறுகிறார்கள் என்று புரியவில்லை. மனமகிழ்மன்றத்தின் சூதாட்டம் மட்டுமல்ல, அரசியல் சூதாட்டங்களும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

Thiru T. MARTIN: When the clubs make application for registration they will have to state in the applications the objects for which the club is being started. May I know from the Hon. Chief Minister whether the Registrar looks into the objects and then grant registration or whether the clubs themselves have asked for permission for gambling and permission for gambling was given?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகளை நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யவேண்டுமென்று 1860 சங்கங்களுடைய பதிவுச் சட்டத்தின் 20-வது பிரிவு கூறுகிறது. ஆகவே, நிபந்தனை எதுவும் விதிக்க முடியாது. பதிவை ரத்து செய்வதற்கு வழி இல்லை. மாநில அரசு திருத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறது என்று முன்னாலே நான் குறிப்பிட்டேன்.

Complaint against Raffle Agent in Tirunelveli

*41 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any petition, dated 7th February 1970 has been received from the public by the Chief Minister, Director of Tamil Nadu Raffle Schems and District Collector of Tirunelveli regarding the violations of Tamil Nadu Raffle Scheme by the authorised agent, Tamil Nadu Raffle Scheme Licence No. 35, Tirunelveli Junction; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். தேதிபோடாத மனு ஒன்று 12—2—1970 அன்று தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு இயக்குநரால் பெறப்பட்டது.

(இ) பரிசுச் சீட்டு ஏஜண்ட் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று காரணம் காட்டுமாறு அறிவிப்பொன்று அவருக்கு அனுப்பப்பட்டது. அவரது விளக்கம் பரிசீலனை செய்யப்பட்டபின், கூட்டுமுறை மூலம் விற்கப்பட்ட பரிசுச் சீட்டுகள் குறித்து மிகையாக வசூலிக்கப்பட்ட தொகைக்கு என ரூ. 84 (ரூபாய் எண்பத்தி நான்கு மட்டும்) அவர் செலுத்தவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது. அந்த ஏஜண்ட் 24—6—1970 நாளிட்ட 1733 செலுத்துச் சீட்டு எண்ணில் அத்தொகையை அரசுக் கருவூலத்தில் செலுத்தினர்.

1970 நவம்பர் 28]

பரிசுச் சீட்டுக்களின் வரவு விற்பனே இவை குறித்த சரியான கணக்கு களை இனி எழுதிவராவிட்டால், எதிர்காலத்தில் ஏஜெண்டின் உரிமம் ரத்தாகுமென்று அவருக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

THIRU T. MARTIN : Sir, the Supreme Court has held in the R.M.D.C. Case which arose from the Mysore State that running of lotteries is not a trade or business but a gambling. That being so, even though there is no constitutional sanctity for the running of this gambling under the Constitution, may I know from the Hon. Chief Minister whether he would at least as a first step stop the entry of lottery tickets from other States to this State, exploiting the common people of our State?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இப்பொழுது இந்தப் பரிசுச் சீட்டு முறை இந்தியா முழுவதும் அநேகமாகப் பின்பற்றப்பட்டு வருகிற முறையாகும். எல்லா மாநிலங்களாலும் இந்த முறை பின் பற்றப்பட்டு வருகிறது. மராட்டிய மாநிலத்திலே மற்ற மாநிலங் களின் பரிசுச் சீட்டுகள் உள்ளே வரக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோல மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகளை நாமும் தடுக்கலாமா அல்லது மராட்டிய மாநிலப் பரிசுச் சீட்டுகளை மட்டும் தடுக்கலாமா—ஏனென்றுல் மராட்டியத்திலே நம்முடைய மாநில பரிசுச் சீட்டுகள் தடுக்கப்பட்டு இருக்கின்றன—என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாநிலப் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களுக்குப் போகாமல் இருப்பதற்கு யோசனை எதுவும் இப் பொழுது இல்லை.

திரு. கே. விநயகம் : இப்பொழுது பரிசுச் சீட்டுகள் விற்கிற விஷயத்திலே நம்முடைய மாநிலத்திலே எந்த இடத்திலே அதிகமாக விற்கிறது? நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களிலே அதிகமாக விற்கப்படுகின்றனவா? ஆகவே, என்ன ப்ரப்போர்ஷனிலே இந்த இரண்டு கேட்டகரிகளிலும் விற்கப்படு கின்றன என்பதற்குக் கணக்கு இருக்கிறதா? சமீபத்திலே 10 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டதாலே நம்முடைய மக்கள் எல்லாம் அதை வாங்கி ஆயிரக்கணக்கானவர்கள் ஏமாந்து போய் விடக்கூடிய நிலைமையிலே பஞ்சாபிக்காரருக்கு அந்தப் பணம் போய் சேர்ந்துவிட்டதாலே இங்கே எல்லாரும் ஏமாந்து போனுர்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள திரு. விநயகம் அவர்கள் இப்படிப் பேசுவது நல்லதல்ல.

Rifle clubs in Madras

* 42 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of rifle club are so be started in Madras City ; and

(b) if so, the details thereof ?